www.prepp.in
prepp
Your Personal Exams Guide



CS (Main) Exam

# TAMIL

## Paper II

## ( LITERATURE )

*Time allowed : **Three** Hours*

*Maximum Marks : **250***

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, **THREE** are to be attempted choosing at least **ONE** from each section.*

*The number of marks carried by a question/part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in chronological order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

## SECTION A

1. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : 10×5=50

(a) குறுந்தொகையில் காணப்படும் தோழி கூற்றுப் பாடல்கள் நயம் மிக்கனவாயத் திகழ்வதை, நும் பாடப்பகுதியிலிருந்து, ஏதேனும் இரு சான்றுகள் வழி புலப்படுத்துக. 10

(b) தெய்வப் புலவர் கண்ட அறிவுடைமையின் தனித் தன்மைகளைக் சுட்டுக. 10

(c) சிலப்பதிகாரம் - அடைக்கலக் காதையில் சமயப் பொதுமை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது ? 10

(d) கும்ப கருணன் வதைப்படலத்தில் வரும் வீடணனின் பண்பு நலன்களை விளக்குக. 10

(e) தம் அவல நிலையைச் சுட்ட நீத்தல் விண்ணப்பத்தில், மாணிக்க வாசகர் சுட்டும் உவமைகளுள் இரண்டினை விளக்குக. 10

2. (a) புறநானூற்றுப் பாடல்களில் காணும் உலகப் பார்வைகளை விளக்குக. 15

(b) திருக்குறளில் காணும் மேலாண்மை சார்ந்த சிந்தனைகளைச் சுட்டுக. 15

(c) குறுந்தொகைப் பாடல்களில் புலப்படும் தமிழர்தம் பண்பாட்டுச் சிறப்புகளை விளக்குக. 20

www.prepp.in

3. (a) கவுந்தி அடிகளாரின் பண்பு நலன்களை விளக்குக. 15

(b) கும்ப கருணன், செஞ் சோற்றுக் கடன் கழித்த செம்மல் என்பது எவ்வாறு பொருந்தும் ? 15

(c) பாவை நோன்பு நோற்பதால் உண்டாகும் உலகப் பயன்களாக ஆண்டாள் கூறுவன யாவை ? 20

4. பின்வரும் பாடற்பகுதிகள் வரும் இடத்தையும் அவற்றின் பொருட்சிறப்பையும் புலப்படுத்துக.

(a) 'சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு.' 15

(b) 'கற்புக் கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்.' 15

(c) 'பசுமண் கலத்துள் நீர் பெய்திரீஇ யற்று.' 20

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

## SECTION B

**5.** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) சமுதாயச் சீர் கேடுகளைக் கண்ணன் பாட்டில் பாரதியார் சாடுவதைத் தெளிவு செய்க. *10*

(b) குடும்ப விளக்கில் தாய்மையின் ஆற்றலைப் பாவேந்தர் எவ்வெவ்வாறு விளக்குகிறார் ? *10*

(c) அரசியல் அறப் பிறழ்வுக்கான காரணங்களாக மு. வரதராசனார் கூறுவன யாவை ? *10*

(d) சித்திரப்பாவையில் வரும் அண்ணாமலையின் பண்பு நலன்களைச் சுட்டுக. *10*

(e) முத்துப்பட்டன் கதையில் காணும் புரட்சிப் போக்குகளைத் தெளிவு செய்க. *10*

**6.** (a) 'கண்ணன் என் தந்தை' என்னும் பாட்டில் கண்ணனின் பெருமைகளாகப் பாரதியார் கூறுவன யாவை ? *15*

(b) குடும்ப விளக்கின் வழியே பாரதிதாசனார் காண விரும்பும் சமுதாய மாற்றங்கள் யாவை ? *15*

(c) நா. காமராசனின் 'வானலில்' கவிதையில் காணும் கவிதை நயங்களை விளக்குக. *20*

www.prepp.in

7. (a) கட்சி அரசியல் பற்றி மு. வரதராசனார் கூறுவன யாவை ? *15*

(b) தம் காலப் புலவர்களின் பிற்போக்கு உணர்வுகளாக அறிஞர் அண்ணா கூறுவன யாவை ? *15*

(c) மாறிவரும் சமுதாய நடைமுறைகளைச் சித்திரப்பாவை ஆசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ? *20*

8. (a) சமூகச் சிக்கல்களை ஆழமாகப் பதிவு செய்வதில் ஜெயகாந்தன் வல்லவர் என்பதைக் குருபீடத்தில் வரும் ஒரு சிறுகதை கொண்டு விளக்குக. *15*

(b) ‘யாருக்கும் வெட்கமில்லை’ என்னும் நாடகத்தில் இடம் பெற்றுள்ள அரசியல் அங்கதங்களைச் சுட்டுக. *15*

(c) மலையருவியில், ஒப்பாரிப் பாடல்கள்வழிப் பெறப்படும் பண்பாட்டுக் கூறுகளைச் சுட்டுக. *20*